## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**ST.C.No.307 /2021**

**P.W. 1 நடராஜன் நாள் 26.05.2025**

**எதரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கும், எதிரிக்கும் உள்ள வரவு செலவுகள் 2010 ல் இருந்து 2017 வரை உள்ளவை என்றால் சரிதான். குறுக்கு விசாரணையில் ஏற்கெனவே சாட்சியம் அளிக்கும் போது பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி, ICICI வங்கி யில் கணக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கு புத்தகங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டுவரவில்லை. எதிரியானவர் 2010 முதல் 2017 வரையிலான காலத்தில் எனது கனரா வங்கி கணக்கு எண்.373110100 1053 இந்த எண்ணிலும், மற்ற எண்களிலும் ஏறத்தாழ மாதம் ரூ.40,500/- செல்லுத்தியுள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆவணங்களை பார்த்தால் சொல்லமுடியும். எதிரியானர் Retired சார் பதிவாளர் ஆவார். எதிரியானவர் தஞ்சாவூர் சீனிவாசபுரத்தில் கிரி ரோட்டில் இலக்கம் 64 A என்ற முகவரியில் பல ஆண்டுகளாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். ஒப்புதல் பதிவீட்டு அஞ்சலில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், without instruction left என்ற கவர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய அறிவிப்பு சட்டம் சார்ந்த வகையில் எதிரிக்கு சார்பு செய்த அறிவிப்பாக எடுத்துக்கொள்ள முடியாது என்றும், இந்த அறிவிப்பை பற்றி எதிரிக்கு எந்தவொரு தகவலும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2017 ம் ஆண்டு வருமானம் வரி செலுத்தியுள்ளேனா என்றால் சரிதான். 2017-2018 ஆம் நிதி ஆண்டிற்கு மட்டும் தான் வருமான வரி செலுத்தியுள்ளேன். 2017-2018 ஆம் ஆண்டில் தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் எதிரியிடம் வரவேண்டிய பணத்தை குறிப்பிட்டு காட்டியுள்ளேனா என்றால் காண்பிக்கவில்லை. எனக்கும், இந்த எதிரிக்கும் சட்டப்பூர்வமான கடன்கள் இல்லை என்றும், அதனால் தான் நான் வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. There is no necessity. Outstanding amount ஐ வருமான வரி return ல் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. Amount actually paid and Amount actually received ஆகியவைகளை மட்டும் காண்பிக்க வேண்டும். எதிரி தஞ்சாவூரில் அவருடைய பணி ஓய்விற்கு பிறகு ரியல் எஸ்டேடட் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். என்னுடைய மகன் ராஜராஜசோழன் என்றால் சரிதான். எனது மகன் பெயரில்

ரூ.5,33,000/- ற்கு எதிரியின் மூலமாக இடம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். ஆவண எண்.141/2020 பத்திரத்தில் கண்ட சொத்தை வாங்கவதற்குஎதிரி ரூ.5,33,000/- கொடுத்ததாக தனியாக ஒரு சீட்டில் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் எதிரிக்கு கொடுத்த பணத்தை வங்கி மூலமாக எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு கை லெட்டர், துண்டு சீட்டில் கடனாக எதுவும் கொடுத்து இருக்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் உள்ள காசோலையை தவிர வேறு எதுவும் ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. பணம் கடன் கொடுக்கும் போது காசோலையை கடன் உத்தரவாதத்திற்காக வாங்கி வைத்துக்கொள்வேன் என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் நாளில் வங்கியில் இருந்து எதுவும் பணம் எடுத்துள்ளேனா என்றால் வங்கி வரவு செலவுகளை பார்த்தால் தான் சொல்லமுடியும். பொதுவாக கடனுக்கு காலக்கெடு மூன்று ஆண்டுகள் தான் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் காலக்கெடுவில் முடிந்த கடனுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. தீர்ந்து போன கடனுக்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. அதனால் தான் நான் எனது வங்கியின் வரவு செலவை கணக்குகளை தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடனுக்கு 100 க்கு ரூ.4 வட்டி பெறுகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. எதிரி ஒன்றும் எனக்கு சொந்தமில்லை. எதிரி இந்த கடனை வங்கி மூலமாக கொடுத்துவிட்டார். எதிரி கொடுத்த காசோலையை எல்லாம் கேட்டுக் கொண்டார் என்றும், கொரணா காலம் என்பதால் நான் காசோலைகளை தேடி எடுத்து தருகிறேன் என்று சொன்னதை நம்பி எதிரி இருந்து விட்டார் என்றும், நான் தீர்ந்து போன கடன் என்பதால் தான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியலல. நான் சொல்லியுள்ள நாளில் எனக்கும், எதிரிக்கும் எவ்வித சட்டப்பூர்வமான கடன் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசு அனுமதி இல்லாமல் லேவா தேவி தொழில் செய்பவர் என்றாலும், அதனால் தான் குறுக்கு விசாரணையின் ஆரம்பத்தில் எத்தனை நபருக்கு நான் இந்நீதிமன்றத்தில் காசோலை மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் கடனுக்கு நான் கொடுப்பவன இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஓம்/--ஜெ, தமிழ்முருகன்,

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.